## அரக்கோணம் நகராட்சி
## மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண். 19 நாள் 25.01.2018.

பொருள் : மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 31.01.2018 புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

-----

அரக்கோணம் நகராட்சி மன்றம் கூட்டம் 31.01.2018 புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உள்ள மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர்/2017 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான TN–73 W- 5969க்கு புதியதாக பேட்டரி பொருத்த வாங்க உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1. | அருள் பேட்டரி ஷாப்பி<br>எண்.129, திருத்தணி ரோடு, ஜோதி நகர் அரக்கோணம் –631003. | **7800.00** |
| 2. | வோல்டெக் இன்ஜினியரிங்<br>எண்.10, முருகப்பன் தெரு,அரக்கோணம். | **8000.00** |
| 3. | ஜு.எஸ்.பேட்டரி பாயின்ட்ஸ்<br>சோளிங்கர், | **8300.00** |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அருள் பேட்டரி ஷாப்பிஅவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.1410/2013/இ1**

**பொருள் எண் :03**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி அலுவலக மேல்நிலை நீர் தேக்க தொட்டி, அசோக் நகர் மேல்நிலை நீர் தேக்க தொட்டி, ஆகியவற்றின் மூலம் தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் 2.50 MLD வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட இரு மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கும் சோடியம் ஹைப்போ குளோரைடு பிளாண்டு புதியதாக அமைக்கபட்டு பயன்பாட்டில் உள்ளது, எனவே, சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் 2018–2019ம் ஆண்டுக்கு சப்ளை செய்ய மதிப்பீடு ரூ, 7.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கான மதிப்பீடு ரூ, 7.00 இலட்சத்தை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :04**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு –8ல் காலிவாரி கண்டிகை 5வது தெருவில் சிறுபாலம் பழுதடைந்து அப்பகுதியில் பொதுமக்கள் போக்குவரத்துக்கும், கழிவு நீர் அடைபட்டும் அப்பகுதியில் சுகாதார சீர்கேடு விளைவிக்கிறது. எனவே, அப்பகுதியில் புதியதாக சிறுபாலம் கட்ட மதிப்பீடு ரூ.90,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை மதிப்பீடு ரூ.90000/–யை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கல்லாறு நீரேற்றும் நிலையம் மற்றும் வின்டர்பேட்டை உயர்நிலை நீர் தேக்க தொட்டி மூலம் நாளொன்றுக்கு சுமார் 2.00 MLD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் கலந்து பாதுகாக்கபட்ட குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது. எனவே, சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் 2018–19ம் ஆண்டுக்கு சப்ளை செய்ய மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கான மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :06**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் நீரேற்றும் நிலையத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 3.00 மில்லியன் லிட்டர்கள் வீதம் குடிநீர் நகருக்கு சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஜீப்ளி ரோடு உயர்நிலை நீர் தேக்க தொட்டி மூலம் குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. எனவே, நகராட்சி மூலம் மேற்படி இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டி சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் கலந்து விநியோகம் செய்யபட்டு வருகிறது. மேற்படி சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் 2018–2019ம் ஆண்டு சப்ளை செய்ய மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கான மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்தினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :07**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையங்களிலுள்ள நீர்மூழ்கி மின் மோட்டார்கள் எதிர்வரும் 2018–19ம் ஆண்டு வறட்சி காலத்தில் அழ்துளை குழாய் கிணறுகளில் நீர் இருப்பு குறைவு காரணமாகவும், மின் இணைப்பு கேபிள்கள் உராய்வு காரணமாகவும் பழுதடைந்து விடுகிறது. இதனால் குடிநீர் ஏற்றம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது, எனவே, நீர் மூழ்கி மோட்டார்களை பழுதுபார்க்கவும், 125HP Vertical Hallow Turbine மோட்டார்களை பராமத்து பணிகள் செய்யவும் மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கான மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்ற அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :08**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் மின் விளக்குகள் மற்றும் தெரு விளக்குகள் பழுதுடைந்து உள்ளது. எனவே மேற்படி பழுதுகளை சரிபார்த்து புதியதாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகளுக்கு மதிப்பீடு ரூ.80,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசியித்தை கருத்தில் கொண்டு ரூ.80000/–யை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :09**

அரக்கோணம் நகராட்சிக்கு எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் 2.50 Cum கொள்ளளவு உள்ள Dumper placer Bin-கள் 48 எண்கள் வாங்கி தருமாறு பொது சுகாதார பிரிவில் கோரப்பட்டுள்ளது. தற்சமயம் நகரட்சியின் நிதி நிலையை பொருத்து 12 எண்கள் 2.5 Cum கொள்ளளவு உள்ள Dumper placer Bin-கள் வாங்க மதிப்பீடு ரூ. 8.75 இலட்சித்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு மதிப்பீடு ரூ. 8.75 இலட்சித்தினை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :10**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் நகராட்சி பொறியாளர், துப்புரவு அலுவலர் அவர்களுடன் ஆணையாளர் ஆய்வு செய்ததில் கீழ்காணும் குறைபாடுகளை சரி செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, குழாய்கள், HDPE தொட்டி, CFL மின் விளக்கு, கதவுகள் மற்றும் மின் மோட்டார்கள் பழுதடைந்துள்ளது. அதனை சரி செய்து தர அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்படி பழுதுகளை செய்து தர மதிப்பீடு ரூ.1,20,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கழிப்பிட பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மதிப்பீடு ரூ.1,20,000/–க்கு நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.887/2017/இ1**

**பொருள் எண் :11**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2017–18ன் கீழ் இந்நகராட்சியில் 29.12.2017ம் தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| 1 | 2<br>__தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2017–18__ | | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் | பெயர் | அதிக சதவிகிதம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | **<u>சிப்பம்–I</u>** கணேஷ் நகர் 1–வது தெருவில் 1–வது குறுக்கு தெரு, கணேஷ் நகர் 1–வது தெருவில் 3–வது மேற்கு குறுக்கு தெரு, கணேஷ் நகர் 1–வது தெருவில் 4–வது மேற்கு குறுக்கு தெரு, கணேஷ் நகர் 1–வது தெருவில் 5–வது கிழக்கு குறுக்கு தெரு, கணேஷ் நகர் 6–வது குறுக்கு தெரு, கணேஷ் நகர் 7–வது குறுக்கு தெரு, கணேஷ் நகர் 8–வது தெரு, கணேஷ் நகர் 9–தாவது குறுக்கு தெரு, கணேஷ் நகர் 9–தாவது தெரு, மாதவா நகர் 2–வது தெரு, மாதவா நகர் 2–வது குறுக்கு தெரு மற்றும் குறுக்கு தெரு, கிரிசிங் நகர் பிரதான தெரு, ஆதிலஷ்மி தெரு, லட்சய்யனார் 1–வது குறுக்கு தெரு, லட்சய்யனார் 2–வது குறுக்கு தெரு, லட்சய்யனார் 3–வது குறுக்கு தெரு, லட்சய்யனார் 4–வது குறுக்கு தெரு, லட்சய்யனார் 5–வது குறுக்கு தெரு, நேதாஜி தெரு, அன்னை கஸ்தூரி பாய் தெரு மற்றும் லட்சய்யனார் தெருவில் தார்சாலை அமைத்தல். | 265.30 | –– | --- | K.V.S குபேரன்<br><br>S.ரமேஷ்பாபு | 4.95%<br><br>9.24% |
| 2. | **<u>சிப்பம்–II</u>** காவனூர் ரோடு, பழைய பஜார் தெரு, மருத்துவமனைதெரு, சோமசுந்தரம் நகர் 1–வது தெரு, டி. என். நகர் பிரதான தெரு, டில்லியப்பன் தெரு, பஜனை கோவில் தெரு மற்றும் பிள்ளையார் கோவில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 134.70 | | | K.V.S குபேரன்<br><br>S.ரமேஷ்பாபு | 4.97%<br><br>10.00% |

மேற்படி இரண்டு சிப்பங்களுக்கும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **சிப்பம் – I** - K.V.S குபேரன் 4.95% மற்றும் **சிப்பம் – II** - K.V.S குபேரன் 4.97% ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளியை குறைத்து தரக்கோரி கடந்த 11.01.2018 அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்பந்ததாரர் திரு.K.V.S குபேரன் அவர்களின் 22.01.2018ம் தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி விலையில் 0.50% குறைத்து தர இசைவு தெரிவித்துள்ளார். அதன்படி கீழ்க்கண்ட விலை விகிதத்தில் பணிகளை செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

| பணி | ஒப்பந்ததாரர் | மதிப்பட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|---|
| <u>சிப்பம்–1</u> | திரு,K.V.S. குபேரன் | 4.95% | (–) 0.50% | 4.45% |
| <u>சிப்பம்–2</u> | திரு,K.V.S. குபேரன் | 4.97% | (–) 0.50% | 4.47% |

மேற்படி இரண்டு சிப்பங்களுக்கும் வரப்பெற்ற ஒப்பந்ததாரின் ஒத்திசைவு கடிதத்தின் படி 0.50% (சிப்பம்–1 திரு, K.V.S. குபேரன் 4.45% மதிப்பட்டை விட அதிகம்,

சிப்பம்–2 திரு.K.V.S. குபேரன் 4.47% மதிப்பட்டை விட அதிகம்) குறைத்து கொடுத்துள்ளனர், எனவே, இரண்டு சிப்பங்களுக்கும் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளை ஏற்று, திட்டப் பணிகள் என்பதால் காலதாமதத்தையும், டீசல் விலை உயர்வையும், சாலைகள் அமைக்க தேவையான அனைத்து மெட்டீரியல்ஸ் விலை உயர்வினையும் கருத்தில் கொண்டு, மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண்.1666/2017/இ1**

**பொருள் எண் :12**

இளநிலை பொறியாளர் இ (ம) ப /ஊரகம்/கிழக்கு பிரிவு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அரக்கோணம் அவர்களின் கடித எண்.230/இ.நி/பொ/இ+ப /ஊ.கி/அரக்/கோ.தனி /2017–18 நாள்.24.01.2018ல், அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட th®L v©.24 V.Ã.v« r®¢ gFÂæš òÂajhf eh‹F bjUés¡F ä‹f«g§fŸ mik¤J ju ரூ.58,440/– (ஐம்பத்து எட்டாயிரத்து நானூற்று நாற்பது ரூபாய் மட்டும்)க்கான கேட்பு வரப்பெற்றுள்ளது மேற்படித்தொகையினை மின்வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண்.819/2017/இ1**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

<u>அரக்கோணம் நகராட்சி</u>

**<u>31.01.2018 அன்று நடைப்பெற்ற சாதாரண கூட்டத்தின் மன்ற தீர்மான எண்.277 உண்மை நகல்</u>**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2017–18ன் கீழ் இந்நகராட்சியில் 29.12.2017ம் தேதி கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| 1 | 2<br>**<u>தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2017–18</u>** | | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| **1.** | **<u>சிப்பம்–I</u>** கணேஷ் நகர் 1–வது தெருவில் 1–வது குறுக்கு தெரு, கணேஷ் நகர் 1–வது தெருவில் 3–வது மேற்கு குறுக்கு தெரு, கணேஷ் நகர் 1–வது தெருவில் 4–வது மேற்கு குறுக்கு தெரு, கணேஷ் நகர் 1–வது தெருவில் 5–வது கிழக்கு குறுக்கு தெரு, கணேஷ் நகர் 6–வது குறுக்கு தெரு, கணேஷ் நகர் 7–வது குறுக்கு தெரு, கணேஷ் நகர் 8–வது தெரு, கணேஷ் நகர் 9–தாவது குறுக்கு தெரு, கணேஷ் நகர் 9–தாவது தெரு, மாதவா நகர் 2–வது தெரு, மாதவா நகர் 2–வது குறுக்கு தெரு மற்றும் குறுக்கு தெரு, கிரிசிங் நகர் பிரதான தெரு, ஆதிலஷ்மி தெரு, லட்சய்யனார் 1–வது குறுக்கு தெரு, லட்சய்யனார் 2–வது குறுக்கு தெரு, லட்சய்யனார் 3–வது குறுக்கு தெரு, லட்சய்யனார் 4–வது குறுக்கு தெரு, லட்சய்யனார் 5–வது குறுக்கு தெரு, நேதாஜி தெரு, அன்னை கஸ்தூரி பாய் தெரு மற்றும் லட்சய்யனார் தெருவில் தார்சாலை அமைத்தல். | **265.30** | –– | --- | K.V.S குபேரன்<br>S.ரமேஷ்பாபு | 4.95%<br>9.24% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | **<u>சிப்பம்–II</u>** காவனூர் ரோடு, பழைய பஜார் தெரு, மருத்துவமனைதெரு, சோமசுந்தரம் நகர் 1–வது தெரு, டி. என். நகர் பிரதான தெரு, டில்லியப்பன் தெரு, பஜனை கோவில் தெரு மற்றும் பிள்ளையார் கோவில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 134.70 | | | K.V.S குபேரன்<br>S.ரமேஷ்பாபு | 4.97%<br>10.00% |

மேற்படி இரண்டு சிப்பங்களுக்கும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **சிப்பம் – I** - K.V.S குபேரன் 4.95% மற்றும் **சிப்பம் – II** - K.V.S குபேரன் 4.97% ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளியை குறைத்து தரக்கோரி கடந்த 11.01.2018 அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்பந்ததாரர் திரு.K.V.S குபேரன் அவர்களின் 22.01.2018ம் தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி விலையில் 0.50% குறைத்து தர இசைவு தெரிவித்துள்ளார். அதன்படி கீழ்க்கண்ட விலை விகிதத்தில் பணிகளை செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

| பணி | ஒப்பந்ததாரர் | மதிப்பட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|---|
| <u>சிப்பம்–1</u> | திரு,K.V.S. குபேரன் | 4.95% | (–) 0.50% | 4.45% |
| <u>சிப்பம்–2</u> | திரு,K.V.S. குபேரன் | 4.97% | (–) 0.50% | 4.47% |

மேற்படி இரண்டு சிப்பங்களுக்கும் வரப்பெற்ற ஒப்பந்ததாரின் ஒத்திசைவு கடிதத்தின் படி 0.50% (சிப்பம்–1 திரு, K.V.S. குபேரன் 4.45% மதிப்பட்டை விட அதிகம், சிப்பம்–2 திரு.K.V.S. குபேரன் 4.47% மதிப்பட்டை விட அதிகம்) குறைத்து கொடுத்துள்ளனர், எனவே, இரண்டு சிப்பங்களுக்கும் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளை ஏற்று, திட்டப் பணிகள் என்பதால் காலதாமதத்தையும், டீசல் விலை உயர்வையும், சாலைகள் அமைக்க தேவையான அனைத்து மெட்டீரியல்ஸ் விலை உயர்வினையும் கருத்தில் கொண்டு, மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண்.1666/2017/இ1**

**மன்ற தீர்மான எண்.277** **நாள் 31.01.2018**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) கோ.கமலகுமாரி.பி.ஏ..,**
**ஆணையாளர் (ம)தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**

**.உண்மை நகல்.**

**ஆணையாளர்(பொ)**
**அரக்கோணம் நகராட்சி**